


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் – வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக 706.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18,720 படுக்கைகள் கொண்ட சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்து, பெண் பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான சாவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், இந்தியாவிற்கான தைவான் நாட்டு தூதர் பௌஷன் ஹோர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.கி.செந்தில்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் –

# ‘எழுச்சித் தமிழர்’ தொல்.திருமாவளவன் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 19 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அவர்களின் பிறந்த நாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்



டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**சமூகக் கொடுமை, ஆதிக்க மனப்பான்மை, வறுமை ஒழிந்த சமத்துவச் சமுதாயம் காணும் நம் பயணத்தில் தோளோடு தோள் நிற்கும் தோழமை, சகோதரர் 'எழுச்சித் தமிழர்' திருமாவளவன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) சென்னை, இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மைதானத்தில் தமிழ்நாடு இந்திய குடிமைப் பணிகள் அலுவலர்களுக்கு (TACS) இடையிலான கிரிக்கெட் போட்டியினை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி மற்றும் போட்டியின் நடுவர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.08.2024) முகாம் அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, முரசொலி செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பாபு, எஸ்.எஸ்.பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக கட்டப்பட்டுள்ள சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தில் மரக்கன்றினை நட்டார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், இந்தியாவிற்கான தைவான் நாட்டு தூதர் பௌஷன் ஹோர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின்மேலாண்மை இயக்குநர் மரு.கி. செந்தில்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) சென்னை, இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மைதானத்தில் தமிழ்நாடு இந்திய குடிமைப் பணிகள் அலுவலர்களுக்கு (TACS) இடையிலான கிரிக்கெட் போட்டியினை பூவா தலையா போட்டு (Toss) தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர். அசோக் சிகாமணி மற்றும் போட்டியின் நடுவர்கள் உடனிருந்தனர்.

## திருப்பெரும்புதூர்: தொழிற்சாலையில் பணிபுரியும் 18,720

# பெண் பணியாளர்களுக்கு சிப்காட் மெகா குடியிருப்பு வளாகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**திருப்பெரும்புதூர், ஆக.19 –**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.08.2024) இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக 706.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18,720 படுக்கைகள் கொண்ட சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு தேவையான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அவற்றில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் சென்னையில் ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு’ வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

அம்மாநாட்டின்போது, 6,64,180 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 26,90,657 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உறுதி செய்திடும் வகையில், உலகளாவிய முன்னணி தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுடன், முன்னெப்போதும் இல்லாத சாதனையாக 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தமிழ்நாடு 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இலக்கினை அடைவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

### தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பைத் திட்டமிடல், மேம்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவை சிப்காட் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

சிப்காட் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை 20 மாவட்டங்களில், 7 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உள்ளடக்கி 40,839 ஏக்கர் நிலப்பரப்பில் 40 தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 53 ஆண்டுகளில், 3,275 தொழில் நிறுவனங்கள் உருவாவதற்கும், அதன் மூலம் மொத்தம் சுமார் 1.83 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு மற்றும் 8.15 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும் சிப்காட் நிறுவனம் முக்கிய காரணியாகத் திகழ்கிறது.

சிப்காட் நிறுவனம் மூலம் பல்வேறு இடங்களில் சிப்காட் தொழிற்பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட மண்டலங்களில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் முக்கிய தொழில் நிறுவனங்களின் வருகையினால் துறை சார்ந்த தொகுப்புகளாக உருப்பெற்றுள்ளன. சிப்காட் தொழிற்பூங்காக்களில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முன்னணி தொழில் நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ளதால், மாநிலத்தின் நிலையான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு முக்கிய பங்களித்து வருகிறது.

இந்தியாவிலேயே முதன் முறையாக சிப்காட் சார்பில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்காக கட்டப்பட்டுள்ள சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்தல்

இந்தியாவிலேயே முதன் முறையாக திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் வடகால் கிராமத்தில் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் பணியாளர்கள் தங்கும் வகையில், சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்து பார்வையிட்டார். மேலும், பெண் பணியாளர்களுக்கு குடியிருப்புக் கான சாவிகளை வழங்கினார். முன்னதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிப்காட் மெகா குடியிருப்பு வளாகத்தில் மரக்கன்றினை நட்டார்கள்.

இந்த வளாகமானது, சுமார் 22.48 இலட்சம் சதுர அடி பரப்பிலான இடத்தில் தரைத்தளம் மற்றும் 10 அடுக்குமாடி கட்டடமாக 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 13 பிரிவுகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தில், ஒவ்வொரு பிரிவிலும் 1,440 நபர்கள் தங்கும் வகையில் 240 அறைகள் அமைந்துள்ளது. இங்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, தடையற்ற மின்சாரம் வழங்கும் வகையில் 33 KVA துணை மின் நிலையம், நவீன தீயணைப்பு வசதிகள், உட்புறச் சாலைகள், தெருவிளக்குகள், 2.70 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் 3 மின் தூக்கிகள் என மொத்தம் 39 மின்தூக்கிகள் மற்றும் ஒவ்வொரு பிரிவிலும் தலா ஒரு ஜெனரேட்டர் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சமையலறை, உணவுக்கூடம், திறந்தவெளி பொழுதுபோக்கு மையத்துடன் கூடிய வண்ண மலர்செடிகள், மரங்கள், செயற்கை நீரூற்று அமைப்புகள் அமைக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்திற்கு பாரத ஸ்டேட் வங்கியின் சார்பில் ரூபாய் 498 கோடி நிதியுதவியும், ஒன்றிய அரசின் சார்பில் ரூபாய் 37.44 கோடி நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தங்கும் விடுதி கட்டடமானது, ஃபாக்ஸ்கான் நிறுவனத்திலுள்ள பெண் பணியாளர்கள் தங்குவதற்காக ஃபாக்ஸ்கான் நிறுவனத்துடன் (M/s. Foxconn Hon Hai Technology India Mega Development Private Limited) ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காவில் அமைந்துள்ள தைவான் நாட்டைச் சார்ந்த ஃபாக்ஸ்கான் நிறுவனமானது சுமார் 2,000 கோடி ரூபாய் முதலீட்டில் கைபேசி, நெட்வொர்க் சாதனங்கள், தனிக்கணினி இணைத்தல் மற்றும் உதிரிப் பாகங்கள் தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்ற 41,000 பணியாளர்களில் 35,000 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யாங் லீயு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கு. செல்வப்பெருந்தகை, இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், இந்தியாவிற்கான தைவான் நாட்டு தூதர் பௌஷன் ஹோர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. கி. செந்தில்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி டி.சினேகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.